1969 பிப்ரவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைகளில் வரும் செய்திகளை வைத்துக்கொண்டு கேள்விகள் கேட்கக்கூடாது என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

Posts of Police Constables.

* 91 *Q.*—DR. H. V. HANDE:
THIRU K. VINAYAKAM: } Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) the date from which the recruitment to the posts of constables has been temporarily suspended; and

(*b*) the reasons therefor?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) காவலர் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பது 14—12—1967 முதல் 28—7—1968 வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

(இ) தமிழ்நாட்டுச் சிறப்புக் காவல் படை கலைக்கப் படவிருந்ததால் அதில் எச்சாகவிருந்த காவலர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்காகப் பதவிகளைக் காலியாக வைத்திருக்கும் நோக்கத்துடன் காவலர் பதவிகளுக்கு ஆள் சேர்ப்பது நிறுத்தப் பட்டது.

திரு. இல. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் உத்தியோக உயர்வு பெறறவர்கள் மீண்டும் பின்னிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று பரவலாகப் பேசப்படுகிறதே, உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, போலீஸ் படையுடன், மலபார் தனிக் காவல் படையை இணைக்கப்பட்டதனால் ஏற்பட்ட விளைவுதான் இது.

THIRU T. MARTIN: May I request the Hon. Minister to state how many constables were recruited after the temporary bar?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 641 பேர்.

திரு. ந. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் அட்டெண்டர் வேலைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களைத்தான் எடுக்கவேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. நாட்டிலே லட்சக்கணக்கான பேர்கள் S.S.L.C படித்துவிட்டு வேலைவாய்ப்புகள் இன்றி இருக்கின்றார்கள். ஆகவே, காவலர் பணிக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கும் வேலை வாய்ப்புகள் அளிக்கும் வகையில் இருக்கும் என்பதை உணர்ந்து, எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களையே எடுக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, காவலர் பணிக்கென தனிப்பட்ட சில தகுதிகள் இருக்கின்றன. காவலர் பணிக்கு கல்வித் தகுதி 8-வது படிப்பும் இருந்தால் போதும். தனிப்பட்டதகுதிகளாக உயரம் 128 செ.மீ. இருக்க வேண்டும்,

மார்பு அகலம் 81–86 செ.மீ. இருக்க வேண்டும். இந்தத் தனிப்பட்ட தகுதிகளோடு இருப்பவர்களைத்தான் காவல் பணிக்கு எடுத்துக்கொள்ளப்படும். 8-வது படிவம் பூர்த்தி செய்தவர்களே இந்தப் பணிக்குப் போதும் என்பதால் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களைப் பற்றிப் பிரச்சினை எழவில்லை.

திரு. நா. காசிராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, மலபார் ஸ்பெஷல் படை தேவையில்லையென்ற காரணத்தினால் கலைக்கப்பட்டதா, எத்தனைபேர் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மலபார் தனிக் காவல் படையைச் சேர்ந்தவர்கள் 641 பேர். அவர்களில் ஒரு ஜமேதார், 14 காவலர்களைத் தவிர மற்றவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர்.

தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியாளர்கள் சங்கம்

***92 வினு.—திரு. ஏ. எம். இராஜா** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியாளர்களின் (Secretariat N.G.G.Os') சங்கத்திடமிருந்து தொழிற்சங்க உரிமைகள் வழங்க வேண்டுமென கோரி ஏதேனும் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்படுத்திய ஃபண்டமென்ட்டல் ரூல்ஸ்—அடிப்படை விதிகள்தான்—இப்போது அமலில் இருக்கின்றன. இன்றைய நிலைமைக்கேற்ப, தொழிலாளர்களுக்கான தொழிற்சங்க உரிமை வழங்குதல் போன்ற நிலைமைக்கேற்ப ஃபண்டமென்ட்டல் ரூல்ஸ்ஸை மாற்றி, புது விதிகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 1960–ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கான ஃபண்டமென்ட்டல் ரூல்ஸ் விதிகளில் 4-எல், 4-எம் விதிகளின்படி, அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதோ, வேலை நிறுத்தம் செய்வதாக எச்சரிக்கை செய்வதோ கூடாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சங்க உரிமைகளைக் கருத்திற் கொண்டுபோனால், இந்த விதிகள் உயிர் அற்றுப் போகும்.

திரு. செஞ்சி. வெ. முனுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்களுக்கு தொழிற்சங்கத்தின் உரிமைகள் கொடுக்கப்படாவிட்டாலும், தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் படியான ஓவர்டைம் அலவன்ஸ், போனஸ் கொடுப்பது, இரகசியக் குறிப்புகளை ஒழிப்பது போன்றவற்றையாவது அரசாங்கம் செய்யுமா ?